# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 144/2024**

Deposition of Witness of PW6

| | | | |
|---|---|---|---|
| Name | : பரமசிவம் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 16st ஏப்ரல் 2026.

1, 3, 5 எதிரிகள் ஆஜரில் உள்ளார். 3ம் எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தச்சங்காட்டுவலசில் குடியிருந்த மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 08.01.2022ம் தேதி நானும், சசிக்குமார் என்பவரும் வெங்கமேட்டிற்கு எனது இருசக்கர வாகனத்தில் காலை 8.00 முதல் 9.00 மணிக்குள் சென்று கொண்டிருந்தோம். அப்போது அரச்சலூார் காவல்ஆய்வாளர் வெங்கமேட்டில் வாகன சோதனை செய்து கொண்டிருந்தார்கள். போலீஸார் எங்களை நிறுத்தி வாகன சோதனை செய்தார்கள். அப்போது மேற்கு நோக்கி சிகப்பு கலர் பொலிரோ வாகனம் பதிவு எண்.9399 என்ற வாகனம் வந்தது. போலீஸார் அந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தார்கள். அதில் 5 நபர்கள் இருந்தார்கள். அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 3 பேர் பொலிரோ வாகனத்தில் வந்தவர்கள் தான். ஒரு நபர் காணொளி காட்சி மூலமாக ஆஜராகியுள்ளார். மற்ற 1 நபர் நீதிமன்றத்தில் இல்லை. போலீஸார் அவர்களை விசாரித்தபோது ஒருவருக்கொருவர் முரணாக பதில் சொன்னார்கள்.

2. மீண்டும் போலீஸார் அவர்களை விசாரித்த போது அவர்கள் கோபிநாத் என்பவரின் வீட்டில் இரும்பு ராடால் கதவை உதைத்து உள்ளே சென்று தாக்கியதை ஒப்புக்கொண்டார்கள். போலீஸார் அவர்களை கைது செய்து அதில் ஒரு நபர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீஸார் பதிவு செய்து எங்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி திருநாவுக்கரசு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் பொலிரோ ஜுப்பில் தாங்கள் 5

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.16 18:47:41 +0530

பேரும் சென்றதை ஒப்புக்கொண்டதால் போலீஸார் அந்த பொலிரோ ஜுப் வாகனம் மற்றும் வாகனத்தில் இருந்த இரும்பு ராடை எங்கள் இருவர் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினார்கள். அதில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள **முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. போலீஸார் கைப்பற்றிய பொலிரோ ஜுப் மற்றும் இரும்பு ராடை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரும்பு ராடை தான் போலீஸார் அங்கிருந்து கைப்பற்றினார்கள். சிகப்பு நிறமுடைய பொலிரோ வாகனம் அதன் பதிவு எண்.9399 ஆகும். (எதிரிகள் மனுவின் பேரில் இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுவிட்டார்கள்).இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**5ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலீஸார் யார் முன்னிலையில் ஒப்புதல் வாக்கு மூலம் யாரிடம் வெண்டிபாளையம் பிரிவு அருகே எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றால் போலீசார் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் வெள்ளை கலர் சட்டை போட்ட நபரிடம் (1ம் எதிரி) என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். வாகனத்தையும் இரும்பு ராடையும் கைப்பற்றிய பொழுது என்னிடம் எங்கு வைத்து கையெழுத்து பெற்றார்கள் என்று சொன்னால் வெங்கமேடு அருகே எதிரிகளை விசாரணை செய்த இடத்தில் வைத்து தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை தட்டச்சு செய்து எடுத்து வந்து என்னிடம் அங்கு அதே இடத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள்.

2. ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த நபரிடம் எங்கு வைத்து கையெழுத்து வாங்கினார்கள் வெங்கமேடு இடத்திலேயே வைத்து கையெழுத்து வாங்கினார். போலீஸார் என்னிடம் வழக்கு சம்பந்தப்பட்ட விபரங்களை கூறினார்களா என்றால் ஆமாம். என்னுடன் வந்தவர் பெயர் சசிகுமார் ஆவார். மேற்படி சசிக்குமார் தச்சங்காட்டு வலசை சார்ந்தவர் ஆவார் உறவினர் இல்லை. புகார் கொடுத்த கோபிநாத்தை எனக்கு தெரியுமா என்றால் அவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் எனக்கு அவரை தெரியும். இந்த வழக்குச் சான்று பொருளான பொலிரோ வாகனத்தையும் இரும்பு ராடையும் கைப்பற்றும்போது புகைப்படம் எடுத்தார்களா என்றால் ஆமாம். நான் இந்த வழக்கு கோபிநாத்துக்கு ஆதரவாக உள்ளூர்காரர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1,2,34 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர் கோபிநாத் உள்ளுரை சேர்ந்தவர் மற்றும் துாரத்து உறவினர் என்றால் உள்ளுரை சேர்ந்தவர், உறவினர் இல்லை. எத்தனை போலீஸார் இருந்தார்கள் என்றால் ஆய்வாளரும் உடன் 3 போலீஸாரும் இருந்தார்கள். அவர்கள் சீருடை அணிந்திருந்தார்கள். நாங்கள் சென்ற போது சுமாராக எத்தனை வாகனத்தை

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.16 18:47:47 +0530

சோதனை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் 2,3 நபர்களின் வாகன சோதனை செய்து கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் ஆமாம். 4 போலீஸார்கள் 5 நபர்களையும் துருவி துருவி கேள்விகள் கேட்டார்கள் என்றால் ஆமாம். கேள்விகள் கேட்க கேட்க வாகன ஓட்டுநர் அதனை குறித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

2. ஒவ்வொருரையும் விசாரணை செய்ய சுமாராக அரை மணி நேரம் இருக்குமா என்றால் சரிதான். ஒவ்வொரு நபரையும் 10 நிமிடம் விசாரணை செய்தார்கள். நான் கையெழுத்து போட்ட தாளை எங்கு சென்று பிரின்ட் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அரச்சலுார் காவல்நிலையத்தில் வைத்து பிரின்ட் எடுத்து வந்தார்கள். நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் முழுவதுமான என்ன இருந்தது என்று தெரியாது என்றால் தெரியாது. நான் கையெழுத்து போட்ட ஆவணங்களில் 5 நபர்களிடமும் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் நான் வெங்கமேட்டிற்கு செல்லவில்லை என்றும், 1ம் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரியிடமிருந்து காரையும், இரும்பு ராடையும் கைப்பற்றவில்லை என்றும், புகார்தாரர் எனது உறவினர் என்பதால் எதுவும் பூர்த்தி செய்யாத வெள்ளை தாள் மற்றும் படிவத்தில் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

3. 5 நபர்களின் ஒப்புதல் வாக்குமூலத்தை தட்டச்சு செய்தவரின் பதவி பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நான் கையெழுத்து போட்ட கைப்பற்றுதல் மகஜரில் எழுதியவரின் பதவி பெயர் தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரிகளையும், இரும்பு ராடையும் இதற்கு முன்பாக நான் பார்க்கவில்லை என்றும், போலீஸார் அடையாளம் காட்டியதின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீஸார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.16 18:47:51 +0530